# 3. இரண்டாம் உலகப்போர்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?
   ***அ) செப்டம்பர் 2, 1945*** ஆ) அக்டோபர் 2, 1945
   இ) ஆகஸ்டு 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945
2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்? **(AUG - 2022)**
   அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின் ***இ) உட்ரோ வில்சன்*** ஈ) பால்டுவின்
3. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?
   அ) க்வாடல்கெனால் போர் ***ஆ) மிட்வே போர்***
   இ) லெனின்கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன்போர்
4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
   அ) கவாசாகி ஆ) இன்னோசிமா ***இ) ஹிரோஷிமா*** ஈ) நாகசாகி
5. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?
   அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள் இ) துருக்கியர்கள் ***ஈ) யூதர்கள்***
6. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
   ***அ) சேம்பர்லின்*** ஆ) வின்ஸ்டன் சர்ச்சில் இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின்
7. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது? **(SEP - 2020)**
   அ) ஜுன் 26, 1942 ***ஆ) ஜுன் 26, 1945*** இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட ***ரைன்லாந்து*** பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் ***ரோம்-பெர்லின்-டோக்கியோ அச்சு உடன்படிக்கை*** என அழைக்கப்பட்டது.
3. ***ரூஸ்வெல்ட்*** கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்.
4. 1940இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் ***சேம்பர்லின்*** ஆவார்.
5. ***ரேடார்*** என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.

## III. பொருத்துக

1. பிளிட்ஸ்கிரிக் - அ) ரூஸ்வெல்ட்
2. ராயல் கப்பற்படை - ஆ) ஸ்டாலின் கிரேடு
3. கடன் குத்தகை - இ) சாலமோன் தீவு
4. வோல்கா - ஈ) பிரிட்டன்
5. க்வாடல்கெனால் - உ) மின்னல் வேகத்தாக்குதல்

| விடைகள்: | 1 - உ | 2 - ஈ | 3 - அ | 4 - ஆ | 5 - இ |
|---|---|---|---|---|---|

## IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

1. **கூற்று:** குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.
   **காரணம்:** அவர் 1941இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.
   ***அ) கூற்றும் காரணமும் சரி***
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
   இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை.
   ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை.

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்? (PTA - 1)**

- ♣ ஹிட்லர் - ஜெர்மனி ♣ முசோலினி - இத்தாலி ♣ பிராங்கோ - ஸ்பெயின்

**2. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?**

- ♣ உணர்ச்சி மிக்க பேச்சுக்களால் மக்களை கவர்ந்தார்.
- ♣ உலகின் உயர்குடி ஆரியர்கள் ஜெர்மனியரே என்ற இன உணர்வை தூண்டினார்.
- ♣ கண்மூடித்தனமான யூத வெறுப்பு கொள்கை.

**3. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி. (MAY-2022, SEP - 2020, PTA - 3)**

- ♣ 1941 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முத்து துறைமுகத்தை எந்த வித முன்னறிவிப்பின்றி ஜப்பான் தாக்கி அழித்தது. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.
- ♣ கோபமடைந்த அமெரிக்கா ஜப்பான் மீது போர் அறிவிப்பு செய்தது.

**4. பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?**

- ♣ 1942 இங்கிலாந்து பேவரிட்ஜ் அறிக்கையை வெளியிட்டது.
- ♣ பொது நலனுக்கு பெருந்தடையாக உள்ள வறுமை ஒழிப்பு,நோய் தடுப்பு மற்றும் உடல் நலப் பாதுகாப்பு அளித்தல்.
- ♣ கல்வி, வேலைவாய்ப்பு அளித்தல்.

**5. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- ♣ உலக வங்கி ♣ பன்னாட்டு நிதி அமைப்பு

**6. பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?**

- ♣ நிதி நிலமையை சீராக வைத்தல்.
- ♣ வேலை வாய்ப்பை பெருக்குதல்.
- ♣ வறுமையை ஒழித்தல்.

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க. (AUG-2022, SEP – 2021, PTA - 2)**

- ♣ கம்யூனிசம், முதலாளித்துவம் கொள்கைகளை அடிப்படையாக கொண்டு உலகம் இரு அணிகளாக பிரிந்தது.
- ♣ ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் பனிப்போர் துவங்கியது
- ♣ சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்தது
- ♣ காலனி ஆதிக்க நாடுகள் விடுதலை அடைந்தன
- ♣ அமைதியை நிலைநாட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது

**2. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க. (SEP-2020, PTA-6, MDL-19)**

- ♣ 1945 அக்டோபர் 24 ல் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது.
- ♣ பொதுச்சபை, பாதுகாப்பு அவை, நிர்வாக சபை , பொருளாதார சமூகமன்றம் மற்றும் பன்னாட்டு நீதிமன்றம் என பல அங்கங்களை கொண்டது.
- ♣ ஐ.நா.வின் சிறப்பு நிறுவனங்கள் FAO, WHO, UNESCO, UNICEF, UNDP
- ♣ 1960களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும்.
- ♣ மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.
- ♣ அமைதிப்படையின் முக்கிய பகுதியாக உள்ள இந்திய இராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

WAY TO SUCCESS